**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**
**CC.355/2013**
**Prosecution Witness : 4**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சுரேஷ் | **Caste** | : |
| **Father's Name** | : பெரியகருப்பண் | **Calling** | : காவல் ஆய்வாளர் |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : 55/2026 |
| | | **Dated** | : 23.02.2026 |

**23.02.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**எதிரி ஆஜர் இல்லை. 355 BNSS Petiiton filed and allowed.**

**<u>சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கில் அ.சா.2,3 ஆகியோர் அ.சா.1ன் நெருங்கிய நண்பர் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் குற்ற சம்பவம் நடந்த நாளான 27.01.2003 பின் 6 வருடம் கழித்துதான் புகார் அளிக்கப்பட்டுள்ளதாக முதல்தகவல் அறிக்கையில் பதிவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1யை தனிநபர் புகார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன்பு காவல் நிலையத்திலோ , மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடமோ புகார்மனு கொடுத்து விசாரணைக்கு காவல் நிலையத்திற்கு வந்ததாக எந்த வித ஆவணம் மற்றும் குறிப்புகளும் கிடையாது என்றால் சரிதான். அ.சா.1 முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளபடி சம்பவம் நடைபெற்றிருந்தால் காவல்நிலையத்தில் புகார் அளித்திருந்திருப்பார். அப்படி ஏதும் சம்பவம் நடைபெறாததால் தான் நேரடியாக காவல்நிலையத்தில் புகார் மனு அளிக்கவில்லை என்றாலும் நீதிமன்றம் மூலமாக மனுசெய்து உத்தரவு பெற்றிருக்கிறார்.

அ.சா.1 எதிரியிடம் பணம் கொடுத்ததற்காக எந்த ஆதாரமும், ஆவணங்களும் நீதிமன்ற உத்தரவு இணைப்புடன் வரவில்லை என்றால் சரிதான். அ.சா.1 முதல் 3 சாட்சிகளை விசாரணை செய்தபோது என்னிடம் எந்தவொரு ஆவணத்தையும் முன்னிலைப்படுத்தவில்லை என்றால் சரிதான். எதிரியுடன் பணிபுரிந்த தங்கம் என்பவர் அ.சா.1 யிடம் பழக்கவழக்கம் இருந்துவந்த நிலையில் அவரிடம் பணத்தை ஏமாந்துவிட்டு எதிரியை தவறுதலாக இவ்வழக்கில் பொய் புகார் கொடுத்து வழக்கில் சேர்ந்துள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.1 புகார் கொடுக்கும்போது எதிரியிடம் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் நேரத்தில் உடன் யார் யார் இருந்தார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 புகாரில் குறிப்பிட்ட படி எந்த சம்பந்தமும் நடைபெறவில்லை என்றும் ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு இவ்வழக்கிற்காக தயார்செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C Digitally signed by DINESH KUMAR C Date: 2026.02.23 10:51:46 +0530

Judicial Magistrate No.II

Dindigul.